தீக்கதிர்
ஊடக உலகில் உண்மையின் பேரொளி
சென்னைப் பதிப்பு

# மக்களுக்கும் இயற்கைக்கும் ஆன உறவை சித்தரிக்கும் திரைப்பட விழா

சென்னை, பிப். 14-

தங்கள் நாட்டு மக்களின் நலனை துளிகூட எண்ணாமல், மனிதத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் எதிராக திட்டங்களையும், கொள்கைகளையும் வகுக்கும் அரசுகள் கோலோச்சிக் கொண்டிருக்கும் காலமிது.

இத்தகைய காலகட்டத்தில், சுற்றுச் சூழல் பாதுகாப்பு குறித்த குரல் முன்னெப் போதும் இல்லாத வகையில் ஓங்கி ஒலிக்க வேண்டியது அவசியம். அரசியல், கலை, இலக்கியம் என அனைத்து தளங்களிலும் சுற்றுச்சூழல் பேசு பொருளாக்கப்பட வேண்டும். அதிலும், அவற்றை திரை வடிவில் ஆவணமாக்குதல் மக்களிடையே மிக எளிதாகவும், வேகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாக உள்ளது.

இதனை கருத்தில் கொண்டு, Loyola Institute of Vocational Education (LIVE), லயோலா கல்லூரி மற்றும் பூவுலகின் நண்பர்கள் அமைப்பும் இணைந்து மக்களும் இயற்கைக்கும் ஆன உறவையும் அதில் ஏற்ப்படும் சிக்கல்களையும் அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்ட திரைப்படங்களை திரையிடும் நோக்கில் ஒரு சர்வதேசே திரைப்பட விழாவை வரும் பிப்ரவரி 20 ஆம் தேதி முதல் பிப். 23 ஆம் தேதி வரை தினமும் காலை 9.30 மணி தொடங்கி மாலை 6.30 மணி வரை நடத்த உள்ளன.

பொலிவியா, திபெத், பங்களாதேஷ், அமெரிக்கா, ஈரான் என சர்வதேச மொழி திரைப்படங்கள் இதில் திரையிடப்பட உள்ளன. அதோடு தமிழ், மலையாளம், மராத்தி மற்றும் மணிப்புரி போன்ற மொழிகளை சேர்ந்த இந்திய திரைப்படங்களும் இதில் திரையிடப்படவுள்ளன. மேலும் ஒரு இலங்கை குறும்படமும் மற்றும் லயோலா மாணவர்களின் நான்கு குறும்படங்களும் திரையிடப்படவுள்ளது.

இதில் மராத்தி, மலையாளம் மற்றும் தமிழ் திரைப்படங்களை இயக்கிய இயக்குனர்களும் அதோனோடு இலங்கை மற்றும் பங்களாதேஷ் திரைப்படங்களை இயக்கிய இயக்குனர்களும் இந்த கலந்துரையாட உள்ளார்கள.

மலையாள இயக்குனர் லிஜோ ஜோஸ், படத்தொகுப்பாளர் சிறீகர் பிரசாத் மற்றும் இயக்குனர் நலன் குமாரசாமி ஆகிய மூவரும் இந்த நிகழ்வை தொடக்கி வைக்க உள்ளார்கள். மேலும் இயக்குனர் மிஸ்க்கின், இயக்குனர் எஸ்.பி. ஜனாநாதன் மற்றும் ஒளிப்பதிவாளர் பி.சி.சிறீராம் ஆகியோர் நிறைவு விழாவில் பங்கேற்க உள்ளனர்.

திரைப்பட பயிற்சி மாணவர்கள், இளைஞர்கள் இந்த திரைப்பட விழாவில் கலந்து கொள்ளஇந்நிகழ்ச்சிக்கு பதிவு செய்வது அவசியம்.மேலும் விவரங்களுக்கு: 9500149944, 9500092712. விழா நடைபெறும் இடம்: லயோலா கல்லூரி, காட்சி ஊடகத்துறை அரங்கம்.

NEWS TODAY

# International film fest at Loyola College

NT Bureau February 16, 2018 0



Chennai: Loyola Institute of Vocational Education (LIVE), a unit of Loyola College, in collaboration with Poovulagin Nanbargal will be organising international film festival at Loyola viscom preview theatre from 20 to 23 February between 9.30 am and 6.30 pm.

A press release said that international movies from Bolivia, Tibet, Bangladesh, America, Iran, Australia and an animation movie will be screened during the festival.

Tamil, Malayalam, Marathi and Manipuri movies will be screened from India. Four short films of Loyola students and a short film from Sri Lanka along with four documentary movies will also be screened.

Film directors from Bangladesh, Sri Lanka, Tamilnadu and Kerala will be participating in the discussions.

The festival will be inaugurated by film editor Sreekar Prasad. Directors Lojo Jose Pellissery, Nallan Kumarasamy, Mysskin, Jananathan, cinematogrpaher P C Sreeram and actor Vijay Sethupathi will be participating in the valedictory function.

Students learning visual communication and film studies who are interested to participate can register for the festival.

For details, contact: 95001 49944, 95000 92712.

# ലോകസിനിമകൾ ഒഴുകും ലൊയോള കോളജിലേക്ക്

Monday 19 February 2018 07:52 AM IST

by സ്വന്തം ലേഖകൻ




വെള്ളിത്തിരയുടെ വെള്ളിവെളിച്ചത്തിൽ തെളിയുന്ന കാഴ്ചകളെ ഏറ്റവും കൂടുതൽ സ്നേഹിക്കുന്നതു ക്യാംപസുകളാകും. യുവതയ്ക്ക് സിനിമയെന്നും ഉൽസവമാണ്. സിനിമകളിൽ നാം നമ്മളെത്തന്നെ കാണുന്നു. നാം ഉൾപ്പെടുന്ന സമൂഹത്തെ കാണുന്നു. നൂറ്റാണ്ടിന്റെതന്നെ ഏറ്റവും വലിയ സ്വാധീന ശക്തിയായി മാറിയ സിനിമ കൈകാര്യം ചെയ്യാത്ത ജീവിതാവസ്ഥകളുണ്ടോ? സംസാരിക്കാത്ത ഭാഷകളുണ്ടോ?

നാളെമുതൽ വെള്ളിയാഴ്ചവരെ ലൊയോള കോളജിൽ ലോക സിനിമകൾ ഒഴുകിയെത്തും. ലൊയോള ഇൻസ്റ്റിറ്റ്യൂട്ട് ഓഫ് വൊക്കേഷനൽ എജ്യുക്കേഷൻ (ലൈവ്) സംഘടിപ്പിക്കുന്ന രാജ്യാന്തര ചലച്ചിത്രമേളയുടെ ഇത്തവണത്തെ വിഷയം പരിസ്ഥിതി.
കാടും മലയും പുഴയും കടലും ഒരുകൂട്ടം മനുഷ്യരും കടന്നുവരുന്ന കുറെ സിനിമകളും ഡോക്യുമെന്ററികളും രാവിലെ 9.30 മുതൽ വൈകിട്ട് 6.30 വരെ ലൊയോളയിലെ വിസ്കോം പ്രിവ്യൂ തിയറ്ററിൽ കാണാനാകും.

ബൊളീവിയ, തിബത്ത്, ബംഗ്ലദേശ്, ഓസ്ട്രേലിയ, ഇറാൻ, ശ്രീലങ്ക തുടങ്ങിയ രാജ്യങ്ങളിൽനിന്നും മലയാളം, തമിഴ്, മറാത്തി, മണിപ്പുരി എന്നീ ഇന്ത്യൻ ഭാഷകളിൽനിന്നുമുള്ള സിനിമകളും ഡോക്യുമെന്ററികളുമാണു ലൊയോളയിൽ കാഴ്ചക്കാരെ കാത്തിരിക്കുന്നത്. സിനിമാ സംവിധായകരും അണിയറപ്രവർത്തകരുമായി സംവാദത്തിനുള്ള അവസരവുമുണ്ട്.
സിനിമകൾ കാണാൻ റജിസ്ട്രേഷൻ നിർബന്ധം.
വിവരങ്ങൾക്ക്: 9500149944, 9500092712.

**പരിപാടികൾ ഒറ്റനോട്ടത്തിൽ**

- **ഒന്നാം ദിവസം (നാളെ)**

രാവിലെ 9.30ന് ഉദ്ഘാടനം-മുഖ്യാതിഥികൾ സംവിധായകരായ ലിജോ ജോസ് പെല്ലിശേരി, നളൻ കുമാരസാമി, എഡിറ്റർ ശ്രീകർ പ്രസാദ്.
11.30ന് റാബിറ്റ് പ്രൂഫ് ഫെൻസ് (ഓസ്ട്രേലിയ)
ഉച്ചയ്ക്കു രണ്ടിനു ജലാൽസ് സ്റ്റോറി (ബംഗ്ലദേശ്)
വൈകിട്ടു നാലിനു ബംഗ്ലദേശി സംവിധായകൻ അബു ഷാഹദ് ഇമോനുമായി സംവാദം.
വൈകിട്ട് അഞ്ചിനു യാറുക്കാഗെ സിങ്കാര ചെന്നൈ (ഡോക്യുമെന്ററി, തമിഴ്)
വൈകിട്ട് ആറിനു സംവിധായകൻ സതീഷുമായി സംവാദം.

- **രണ്ടാം ദിവസം**

രാവിലെ 9.30 കാടുപൂക്കുന്ന നേരം (മലയാളം)
11.30 മുതൽ സംവിധായകൻ ഡോ. ബിജുവുമായി സംവാദം.
ഉച്ചയ്ക്കു 12.15ന് അൺലോക്ക് (ഡോക്യുമെന്ററി, തമിഴ്)
ഉച്ചയ്ക്ക് 1.45നു മൗണ്ടൻ പട്രോൾ (ടിബറ്റ്)
വൈകിട്ടു 3.15നു ദി ഇൻപോസിബിൾ (യുഎസ്എ)
വൈകിട്ട് 5.50ന് എഴുത്തുകാരൻ അജയ് ബാലയുമായി സംവാദം.

- **മൂന്നാം ദിവസം (വ്യാഴം)**

രാവിലെ 9.30നു ദ് ഡാമ്ഡ് റെയിൻ (മറാത്തി) (The Damned Rain)
ഉച്ചയ്ക്കു 12നു ദ് ലൊറാക്സ് (ആനിമേഷൻ)
ഉച്ചയ്ക്കു 2.30ന് ഇവൻ ദ് റെയിൻ (ബൊളീവിയ)
വൈകിട്ട് അഞ്ചിന്-ലേഡി ഓഫ് ദ് ലേക്ക് (മണിപുർ)
തുടർന്നു പത്രപ്രവർത്തകൻ വിജയ് ആനന്ദുമായി സംവാദം.

- **നാലാം ദിവസം (വെള്ളി)**

രാവിലെ 9.30നു തമിഴ് ഡോക്യുമെന്ററികളായ നമ്മാൽവാർ, ഗായത്രി-മൈ ലൈഫ് അറ്റ് തിരുവണ്ണാമലൈ, വെസ്റ്റേൺ ഗഡ്സ്.
തുടർന്ന് സിനിമാ സംവിധായകൻ ലെനിൻ ഭാരതി, ക്യാമറാമാൻ തെനി ഈശ്വർ, കോസ്റ്റ്യൂം ഡിസൈനർ എസ്.ആർ. രാജ്മോഹൻ എന്നിവരുമായി സംവാദം.
ഉച്ചയ്ക്കു 12.40നു സേവ് ദ് ഷോളാസ് (തമിഴ് ഡോക്യുമെന്ററി)
ഉച്ചയ്ക്കു 2.15 മുതൽ ലൊയോളയിലെ വിദ്യാർഥികൾ നിർമിച്ച നാലു ഷോട്ട് ഫിലിമുകൾ.
വൈകിട്ടു 3.35നു ടെർട്ടിൽസ് ക്യാൻ ഫ്ലൈ (ഇറാൻ) (Turtles can fly)
വൈകിട്ട് 5.45 സമാപന സമ്മേളനം.

മാതൃഭൂമി

മാതൃഭൂമി 2018 ഫെബ്രുവരി 22 • വ്യാഴാഴ്ച

# സിനിമയ്ക്ക് കാലത്തോട് സംവദിക്കാൻ സാധിക്കണം - ഡോ. ബിജു



ലൊയോള കോളേജിൽ നടക്കുന്ന രാജ്യാന്തര ചലച്ചിത്ര മേളയിൽ സംവിധായകൻ ഡോ. ബിജു സംസാരിക്കുന്നു

**ചെന്നൈ ▸** സിനിമ ഗൗരവമുള്ള വിഷയമാണെന്നും അതിന് കാലത്തിനോട് സംവദിക്കാനുള്ള ശക്തി ഉണ്ടാകണമെന്നും സംവിധായകൻ ഡോ. ബിജു അഭിപ്രായപ്പെട്ടു. ലൊയോള ഇൻസ്റ്റിറ്റ്യൂട്ട് ഓഫ് വൊക്കേഷണൽ എജ്യൂക്കേഷൻ(ലൈവ്) സംഘടിപ്പിക്കുന്ന രാജ്യാന്തര ചലച്ചിത്രമേളയിൽ സംസാരിക്കുകയായിരുന്നു അദ്ദേഹം.

നവീന സാങ്കേതികതകൾ സിനിമയ്ക്ക് ഊർജം പകരുന്നുണ്ട്. പക്ഷേ സാങ്കേതികതയെ മാത്രം ആശ്രയിച്ച് നല്ല സിനിമകൾ രൂപപ്പെടുത്താനാവില്ല. തന്റെ സിനിമയിൽ മുഖ്യധാരാ നടീനടൻമാരെ ഉൾപ്പെടുത്തിയത് കൂടുതൽ ജനങ്ങൾ കാണണം എന്ന ഉദ്ദേശം കൊണ്ടാണെന്നും ബിജു വ്യക്തമാക്കി. സിനിമാസംവിധാന രംഗത്തേക്ക് കാലെടുത്തു വെച്ചപ്പോൾ പലരും നിരുത്സാഹപ്പെടുത്തുക മാത്രമാണ് ചെയ്തത്. ഡോക്ടറായതിനു ശേഷം വായ്പയെടുത്താണ് ആദ്യ സിനിമ സംരംഭം തുടങ്ങിയതെന്നും ബിജു പറഞ്ഞു.

അദ്ദേഹം സംവിധാനം ചെയ്ത കാടുപൂക്കുന്ന നേരം എന്ന സിനിമ മേളയിൽ പ്രദർശിപ്പിച്ചു. സംവാദവും ഉണ്ടായിരുന്നു. ബൊളീവിയ, ടിബറ്റ്, അമേരിക്ക, ഇറാൻ, ഓസ്ട്രേലിയ, ബംഗ്ലാദേശ്, ശ്രീലങ്ക എന്നിവിടങ്ങളിൽ നിന്നുള്ള ചിത്രങ്ങൾക്കു പുറമെ ഇന്ത്യയിലെ വിവിധ ഭാഷകളിൽ നിന്നുള്ള ചിത്രങ്ങളും മേളയിൽ പ്രദർശിപ്പിക്കുന്നുണ്ട്. രാവിലെ 9.30 മുതൽ വൈകീട്ട് 6.30 വരെയാണ് പ്രദർശനം. സിനിമകൾ

அயல் சினிமா
Ayal cinema | மாத இதழ் | மார்ச் 2018 | பக்.68 | ரூ.50



இடமிருந்து வலமாக - பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் திரு. சுந்தர்ராஜன், ஒளிப்பதிவாளர் திரு.பி.சி.ஸ்ரீராம், இயக்குநர் திரு.மிஷ்கின், இயக்குநர் திரு.ஜனநாதன், LIVE இயக்குனர் திரு. A.P.அருண் கண்ணன்

# லயோலா கல்லூரியின் சர்வதேச திரைப்பட விழா 2018

உலகம் முழுமைக்குமான பொதுவான சிக்கலாக நாம் இப்போது எதிர்நோக்கியுள்ளது சூழல், மற்றும் பருவநிலை சார்ந்த மாறுபாடுகளும், அதனால் உருவாகியுள்ள அசாதாரண நிலையுமே. இதுவரை பூமியில் வாழும் அத்தனை உயிர்களும் எதிர்கொண்ட சிக்கல்களிலிருந்து இது முற்றிலும் வேறானது. உயிர்வாழ்வதற்க்கான சூழல் ஒட்டுமொத்தமாக அழிந்து கொண்டிருக்கும் நிலையில், தங்களை காத்துக்கொள்ள அல்லது எஞ்சியிருக்கும் சூழலைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டிய மிக அவசியமான தருணம் இது.

இத்தகைய தருணத்தில், சுற்றுச் சூழல் பாதுகாப்பு குறித்த குரல் முன்னெப் போதும் இல்லாத வகையில் ஓங்கி ஒலிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். அரசியல், சினிமா, கலை, இலக்கியம் என அனைத்துத் தளங்களிலும் சுற்றுச்சூழல் பேசுபொருளாக்கப்பட வேண்டும். அதிலும், அவற்றைத் திரை வடிவில் ஆவணமாக்குதல் மக்களிடையே மிக எளிதாகவும், வேகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாக உள்ளது. உலகம் முழுவதும் பல உண்மை நிகழ்வுகளைக் களமாகக்கொண்டு எடுக்கப் பட்ட திரைப்படங்கள், மக்களிடையே ஏற்படுத்திய தாக்கத்தை நாம் அறிந் திருப்போம்.

இதனைக் கருத்தில் கொண்டு, Loyola Institute of Vocational Education (LIVE), மற்றும் பூவுலகின் நண்பர்கள் அமைப்பும் இணைந்து மக்களுக்கும் இயற்கைக்குமான உறவையும் அதில் ஏற்படும் சிக்கல்களையும் அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்ட திரைப்படங்களைத் திரையிடும் நோக்கில், ஒரு சர்வதேசத் திரைப்பட விழாவை பிப்ரவரி 20 தொடங்கி 23 வரை தினமும் காலை 9.30 மணி தொடங்கி மாலை 6.30 மணி வரை ஒருங்கிணைத்திருந்தார்கள். லயோலா கல்லூரி இந்த ஆண்டு நடத்தும் எல்லா நிகழ்வுகளையும் சூழல் பாதுகாப்பை முன்னிருத்தியே நடத்துகிறது. கல்லூரியின் அனைத்து துறை சார்ந்த நிகழ்வுகள், சந்திப்புகள் என்று எல்லாவற்றிலும் பேசு பொருளாக சூழலியலே மையமாக இருக்கிறது. அதனால் இந்தத் திரைப்பட விழாவையும் அந்தக் கருத்தை ஒட்டியே வடிவமைக்கட்டது.

திரைப்பட விழாவில் பொலிவியா, திபெத், பங்களாதேஷ், அமெரிக்கா, ஈரான் உள்ளிட்ட சர்வதேச மொழித் திரைப்படங்களுடன் தமிழ், மலையாளம், மராத்தி மற்றும் மணிப்புரி உள்ளிட்ட மொழிகளில் எடுக்கப்பட்ட இந்தியத் திரைப்படங்களும், இலங்கையில் எடுக்கப்பட்ட ஒரு குறும்படமும் திரையிடப்பட்டது. மேலும் லயோலா கல்லூரி மாணவர்களின் நான்கு குறும்படங்களும் திரையிடப்பட்டன.

அழிவின் மிகமுக்கிய சாட்சியாய் தென் அமெரிக்காவின் கேப்டவுன் நகரம் இன்று நம் முன் நிற்கிறது. அந்த நகரில் தண்ணீர் சுத்தமாக இல்லாமல் போகும் நிலை உருவாகியுள்ளதாக சமீபத்திய செய்திகள் உறுதி படுத்துகின்றன. இன்று அந்த நகருக்கு ஏற்பட்ட நிலை நாளை உலகம் முழுமைக்கும் நடக்கப் போகும் நாள் வெகு தொலைவில் இல்லை. சூழலுக்கான ஆபத்து என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் சார்ந்ததோ, அல்லது ஒரு நாட்டுக்கு மட்டும் உள்ள தனிப்பட்ட பிரச்சனையோ அல்ல. இது பூமியில் உயிரினங்கள் வாழ்வதற்கான சூழலை முற்றிலும் சிதைக்கிறது. இது ஒட்டு மொத்த பூமிக்குமான பிரச்சனை.

தண்ணீர், உணவு, காற்று, மண் உள்ளிட்ட அனைத்தும் வாழும் அத்தனை உயிர்களுக்கும் பொதுவானது. ஆனால் மனித சமூகமானது இவை அனைத்தையும் தங்களின் சுயநலத்திற்காக மாசுபடுத்தி, ஒரு மிகப்பெரிய அழிவிற்கு இட்டு செல்கிறது.

இத்தகைய சிக்கல்களை, அதை நோக்கிய தீர்வுகளை கலை வடிவில் மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும் என்கிற முயற்சியின் தொடக்கமாக இந்த சூழலியல் திரைப்பட நிகழ்வு அமையும் என்கிற நம்பிக்கையின் அடிப்படையிலேயே இந்த நிகழ்வு முக்கியத்துவம் பெறுகிறது.

அங்கமாலிடைரீஸ்படத்தின்இயக்குனர் திரு. லிஜோ ஜோஸ் பெல்லிசெரி, சூது கவ்வும் இயக்குனர் திரு. நலன் குமாரசாமி மற்றும் திரைப்பட தொகுப்பாளர் திரு. ஸ்ரீகர் பிரசாத் ஆகியோர் இணைந்து இந்த நிகழ்வைத் தொடக்கி வைத்தனர். நிகழ்வு துவங்கியவுடன், முதல் படமாக Rabbit proof fence என்கிற ஆஸ்திரேலிய அபோர்ஜின்ஸ் பிரச்சனைகளை வைத்து எடுக்கப்பட்ட திரைப்படம் திரையிடப்பட்டது. மத்திய உணவிற்குப் பின் ஜலால்'ஸ் ஸ்டோரி என்கிற பங்களாதேஷ் நாட்டின் திரைப்படம் திரையிடப்பட்டு, அந்தப் படத்தின் இயக்குநர் திரு. அபு சஹேத் ஈமானுடன் கலந்துரையாடலும் நடை பெற்றது.

மாலையில் காவிரி ஆறு குறித்த (Journey with the River Cauvery) என்கிற ஆவணப்படமும், யாருக்காக சிங்காரச் சென்னை என்கிற ஆவணப்படமும் திரையிடப்பட்டது. தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வில் தமிழின் முன்னணி நடிகர் திரு. விஜய் சேதுபதி கலந்துகொண்டார். திரு. அருண்மொழி இயக்கிய தண்ணீர் நாடகத்தை தொடங்கிவைத்து அவர் உரை நிகழ்த்தினர்.

பின்பு The Lorax என்கிற அனிமேஷன் படமும், அதனைத் தொடர்ந்து தேசிய விருது பெற்ற மணிப்புரி மாநிலத்தின் Lady of the Lake திரைப்படமும், அதனைத் தொடர்ந்து பொலிவியா நாட்டின் தண்ணீர் பிரச்னையை மையமாக வைத்து எடுக்கப்பட்ட EVEN the Rain திரைப்படம்



மேற்குத்தொடர்ச்சி மலை திரைப்படத்தின் இயக்குநர் திரு. லெனின் பாரதி, படத்தின் ஒளிப்பதிவாளர் திரு. தேனி ஈஸ்வர் உள்ளிட்ட படக்குழுவினர்

திரையிடப்பட்டது. இறுதிநாளில் மேற்குத்தொடர்ச்சி மலை திரைப்படமும் திரையிடப்பட்டு, அந்த படத்தின் இயக்குநர் மற்றும் குழுவினருடன் கலந்துரையாடல் நடைபெற்றது. முக்கியமாக கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் அந்த மக்களோடும், அந்த வாழ்வியலோடும் ஒன்றிப் பழகிய பின்பு தான் இந்த படத்தை எடுத்ததாக அதன் இயக்குனர் திரு. லெனின் பாரதி அவர்கள் தெரிவித்தார். பின்பு நிகழ்வின் கடைசி படமாக Turtles can fly என்கிற திரைப்படம் திரையிடப்பட்டது

திரைப்படவிழாவினை தொகுத்து, அதன் நோக்கம் குறித்து பேசினார் பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் திரு. சுந்தர்ராஜன். சிறப்பு விருந்தினர்களாக ஒளிப்பதிவாளர் திரு. பி.சி. ஸ்ரீராம், திரைப்பட இயக்குநர்கள் திரு. மிஷ்கின், திரு.ஜனநாதன், ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார். Live துறையின் திரு. கௌரி சங்கர் நன்றி கூறினார்.

**திரையிடப்பட்ட படங்கள் குறித்த முன்னோட்டம்:**

Gabhricha Paus *(மராத்தியில்)* The Damned Rain *(ஆங்கிலத்தில்)*

மராத்தி இயக்குநர் திரு. சதீஷ் மன்வர் *(Satish Manwar)* இயக்கிய இந்தப்படம் 10 எட்டு வருடங்களுக்கு முன் மராத்தி மொழியில் வந்தது, இன்று இந்தப் படத்தை வேறு மொழியில் எடுக்க விரும் பினால் அது அவ்வளவு சுலபமான காரியமாக இருக்காது. பல மாநிலங்கள் இந்தப்படத்திற்கு தடை விதிக்கக்கூடும். காரணம்? படம் வந்து எட்டு வருடம் ஆகியும், விவசாயிகள் தற்கொலை அதிகரித்துக் கொண்டே போகிறதோ தவிர,

அவர்கள் சந்திக்கும் பிரச்சனை களுக்கான தீர்வுகளை எட்டியபாடில்லை. மத்திய மாநில அரசுகள் அவர்களை கண்டுகொள்வதாக இல்லை. அவர்களின் துயரங்கள் தொடர் கதையாகயுள்ளன. எனவே உண்மையை பேசும் இத்தகைய படங்கள் ஆளும் அரசுகளை பெரும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கும் என்பது நிதர்சனமான உண்மை.

Even the Rain

பொலிவியாவின் கொச்சபம்பா நகரின் தண்ணீர் விநியோகத்தை தனியாரிடம் ஒப்படைத்த பின்பு, அதற்கு எதிராக அங்கு நடைபெறும் மக்கள் போராட்டங்களால் அந்த நிறுவனம் அங்கிருந்து துரத்தப் படுகிறது. இதை அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்ட இந்தப்படம் 2010 ஆம்



ஆண்டு வெளியானது. இது. 2010ல் வெளி வந்த இந்தப் படம், விவசாயம் செய்ய பக்கத்து மாநிலத்தை எதிர்பார்த்து நிற்கும்போதே, தாமிரபரணி ஆற்றை கோக்கிடம் தாரை வார்த்திருக்கும் நமக்கு நெருக்கமானது தான். பொலிவியாவில் இருந்துதுரத்தி விடப்பட்ட அந்த நிறுவனம் Bechtel, இந்த நிறுவனத்திடம் தான் இன்று திருப்பூரின் தண்ணீர் விநியோக உரிமை வழங்கப்பட்டுள்ளது என்பது கசப்பான உண்மை.

Turtles can fly

போர்களில், பல உயிர்பலிகளும், வளங்கள் அழிக்கபடுவதும், பல மக்களின் வாழ்வாதாரங்கள் அழிக்கபடுவதும் மறுக்க முடியாத உண்மை. ஆனால் அந்த உண்மையோடு அந்த போருக்கான எந்த காரனியோடும் தொடர்பில்லாத சிறார்களும், குழந்தைகளும் பலியாக்கப் படுவது வரலாற்றின் கருப்பு பக்கங்களின் சாட்சியாக உள்ளது. வரலாற்றின் பல போர்கள் துவங்கி, இன்று ஈழம், சிரியா என உலகில் எங்கெங்கெல்லாம் போர் நடைபெறுகிறதோ அங்கெல்லாம் இந்தப் பலிகொள்ளல் நடந்தேறிவிடுகிறது. ஆனால் சமூகத்தில் குரலற்றவர்களாக இருக்கும் இவர்கள் பலி கொள்ளப்படும் சம்பவங்கள் பெருமளவில் வெளிவருவதில்லை.

துருக்கி, ஈரான், ஈராக் ஆகிய மூன்று நாடுகளிடையே கிடந்து அல்லல்படும் குர்திஸ் (Kurdish) மக்களுடைய வாழ்கையை மையமாக வைத்து எடுக்கப்பட்டுள்ள இந்த படம், போரினால் பதிக்கப்படும் மக்கள், போர் உருவாக்கும் அகதிகள், மிக முக்கியமாக சிறார் மற்றும் குழந்தைகளின் நிலையை நேரடி சாட்சியாக நின்று பதிவு செய்கிறது.

The Impossible

2004 ஆம் ஆண்டு இந்தியப்பெருங்கடலில் சுமாத்ரா தீவில் சுனாமி ஏற்பட்டது. அந்த நேரத்தில் தாய்லாந்துக்கு சுற்றுலா வந்த குடும்பம் சுனாமியில் மாட்டிக்கொண்டது. ஒட்டுமொத்த உலகத்தையே அதிர வைத்த அந்த இயற்கைப் பேரிடரில் சிக்கும் அந்தக் குடும்பம் எதிர்கொண்ட நிகழ்வுகளின் உண்மைக் கதையை வைத்து எடுக்கப்பட்டதே இந்தப் படம்.

தி இந்து
தமிழால் இணைவோம்
புதன், மார்ச் 7, 2018

# 'லைவ்' சர்வதேசத் திரைப்பட விழா; சென்னையைத் தாக்கும் சூழல் திரைப்படங்கள்





காற்று அழுதுகொண்டிருக்கிறது... இங்கே வெட்டப்பட்டதும் வீழ்ந்துகிடப்பதும் மரங்கள் மட்டுமே அல்ல, மனித வாழ்க்கையும்தான் என்பதற்கு ஆதாரமாக நம் கண்முன்னே முடமாகிக் கிடக்கிறது நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் சுற்றுச்சூழல். வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருக்கும் நம் திரைப்படங்கள் சுற்றுச்சூழல் என்பதைத் தொட்டாவது காட்டியிருக்கின்றனவா?

"நவீன உலகின் தழும்புகளை வரலாற்றில் பதிவுசெய்யத் தூரிகைகளைவிடவும் வேகமான ஆயுதம் தேவை. அதற்காகவே கேமராவை தேர்ந்தெடுத்தேன்." என்றார் உலகமே வியக்கும் பிரெஞ்சு ஒளிப்பட மேதையான ஹென்றி கார்டியர் பிரெஸ்ஸோன்.




நம் சூழலின் அழிவைக் கலைஞர்களே கண்டுகொள்ளாதபோது, தங்கள் நாட்டு மக்களின் நலனைத் துளிகூட எண்ணாமல், மனிதத்துக்கும் சுற்றுச்சூழலுக்கும் எதிராகத் திட்டங்களையும் கொள்கைகளையும் வகுக்கும் அரசுகள், தங்கள் பதவி, அதிகாரத்தின் மீது மட்டுமே அக்கறை காட்டும் ஆட்சியாளர்களை எப்படிக்கேட்பது?

இன்று சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த குரல் முன்னெப்போதும் இல்லாத வகையில் ஓங்கி ஒலிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். அரசியல், கலை, இலக்கியம் என அனைத்துத் தளங்களிலும் சுற்றுச்சூழல் பேசுபொருளாக்கப்பட வேண்டும். அதிலும், அவற்றைத் திரை வடிவில் ஆவணமாக்குதல் மக்களிடையே மிக எளிதாகவும் வேகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாக உள்ளது.





அதை முன்னெடுக்கும் நோக்கத்தில் சென்னை லயோலா கல்லூரியின் 'லைவ்' துறையும் (Loyola Institute of Vocational Education - LIVE) பூவுலகின் நண்பர்கள் அமைப்பும் இணைந்து, இதுவரை இல்லாத அரிய முயற்சியாக மாபெரும் சர்வதேச சுற்றுச்சூழல் திரைப்பட விழா ஒன்றை நடத்த உள்ளன.

'தி இந்து' தமிழ் நாளிதழ் அச்சு ஊடகப் பங்கேற்பாளராக இணைந்து முன்னெடுக்கும் இத்திரைப்பட விழாவில், திபெத் , அமெரிக்கா, ஈரான், பொலிவியா நாடுகளின் திரைப்படங்கள், இந்தியாவிலிருந்து மராத்தி, மணிப்புரி, மலையாளம் மற்றும் தமிழ் மொழி திரைப்படங்களும் திரையிடப்பட உள்ளன.

மேலும் சூழல் சார்ந்த பல குறும்படங்கள் மற்றும் ஆவணப்படங்கள் இந்த விழாவில் திரையிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இம்மாதம் 20-ம் தேதி தொடங்கி 23-ம் தேதி வரை (பிப்ரவரி 20-23) நான்கு நாட்கள் சென்னை லயோலா கல்லூரியின் காட்சி ஊடகத்துறை அரங்கில் நடக்கிறது. இயக்குநர்கள் எஸ்.பி. ஜனநாதன், மிஷ்கின், நலன் குமரசாமி, லிஜோ ஜோஸ் பெல்லிசெரி போன்றவர்கள் இதில் கலந்துகொள்ள இருக்கிறார்கள்.




மக்கள் மீதும், சுற்றுச்சூழல் மீதுமான காதலைத் திரையில் காண்பிக்க நினைக்கும் திரைப்படப் பயிற்சி மாணவர்கள், இளைஞர்கள் இந்தத் திரைப்பட விழாவில் அவசியம் கலந்துகொள்ள வரும்படி அழைக்கிறது விழாக்குழு.

இந்தத் திரைப்பட விழாவில் பங்கேற்க விரும்பும் அனைவரும் முன்பதிவு செய்துகொள்ள வேண்டியது அவசியம். கூடுதல் விவரங்களுக்கு:

***9500149944, 9500092712 | முகநூல்:***

***Facebook:@loyolalive***

தி இந்து
தமிழால் இணைவோம்
புதன், மார்ச் 7, 2018

# கண்ணோட்டம்: நேரில் வந்த இயக்குநர்கள்! - ‘லைவ்’ சர்வதேசத் திரைப்பட விழா 2018



சுயநலத்தின் குரூர கைகள் நமது காற்றையும் நீரையும் மண்ணையும் மலையையும் ஏன் உண்ணும் உணவையும் சிதைத்துக்கொண்டிருக்கின்றன. தமிழகம் முன் எப்போதையும்விட மிக மோசமான சூழலியல் பிரச்சினைகளைச் சந்தித்துக்கொண்டிருக்கிறது.

இத்தகைய தருணத்தில் அரசியல், சமூகம், கலை, இலக்கியம் என அனைத்துத் தளங்களிலும் சுற்றுச்சூழல் பேசுபொருளாக்கப்பட வேண்டும். கலைத்துறையைப் பொறுத்தவரை சூழலியல் அவலங்களை ஆவணமாக்கி மக்கள் மத்தியில் மிக எளிதாகவும் வேகமாகவும் எடுத்துச்சென்று தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகக் காட்சி ஊடகம் இருக்கிறது.

உலகம் முழுவதும் உண்மையாக நிகழ்ந்துகொண்டிருக்கும் சூழலியல் பிரச்சினைகளைக் கதைக் களமாகக் கொண்டு எடுக்கப்பட்ட திரைப்படங்கள், இன, மொழி, தேச எல்லைகளைக் கடந்து மக்களிடையே தாக்கத்தை ஏற்படுத்திவருகின்றன. அப்படிப்பட்ட படங்களைத் தமிழ் பார்வையாளர்களுக்கும் அறிமுகப்படுத்துவதன் மூலம்தான் திரையுலகுக்கு ‘சூழலியல்’ அடிக்கடி கையாளப்பட வேண்டிய உள்ளடக்கம் என்பதைக் கவனப்படுத்த முடியும்.

இதைக் கருத்தில் கொண்டே சென்னை லயோலா கல்லூரியின் திரைக்கல்வித் துறையான 'லைவ்' (LIVE - Loyola Institute of Vocational Education), பூவுலகின் நண்பர்கள், ‘தி இந்து’ தமிழ் நாளிதழ் இணைந்து சர்வதேச சூழலியல் திரைப்பட விழாவைக் கடந்த பிப்ரவரி 20-ம் தேதி தொடங்கி 23வரை நடத்தின.

இந்த நான்கு நாள் திரைப்பட விழாவில் பொலிவியா, திபெத், பங்களாதேஷ், அமெரிக்கா, ஈரான் உள்ளிட்ட சர்வதேச மொழித் திரைப்படங்களுடன் தமிழ், மலையாளம், மராத்தி மற்றும் மணிப்புரி உள்ளிட்ட மொழிகளில் எடுக்கப்பட்ட இந்தியத் திரைப்படங்கள், இலங்கையில் எடுக்கப்பட்ட ஒரு குறும்படம், லயோலா கல்லூரி மாணவர்களின் நான்கு குறும்படங்கள் ஆகியவை திரையிடப்பட்டன.




‘காடு பூக்குன்ன நேரம்’ படத்தின் இயக்குநர் பிஜு தாமோதரன்

## தொடக்கவிழா

‘அங்கமாலி டைரீஸ்’ மலையாளப் படத்தின் இயக்குநர் லிஜோ ஜோஸ் பெல்லிசெரி, ‘சூது கவ்வும்’ இயக்குநர் நலன் குமரசாமி, எடிட்டர் ஸ்ரீகர் பிரசாத் ஆகியோர் இணைந்து லயோலா கல்லூரியின் காட்சி ஊடக அரங்கில் நடந்த படவிழாவைத் தொடங்கி வைத்தனர். மேலும் நிகழ்வில் லயோலா கல்லூரியின் ரெக்டர் அருட் தந்தை ஏ.எம். பிரான்சிஸ் ஜெயபதி, கல்லூரியின் முதல்வர், முனைவர். எம். சேவியர் ஆரோக்கியசாமி, ‘லைவ்’துறையின் இயக்குநர் ஏ.பி. அருண் கண்ணன், பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் சுந்தர்ராஜன் அதில் அங்கம் வகிக்கும் பத்திரிகையாளர் கவிதா முரளிதரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாநில அளவில் நாம் எதிர்கொள்ளும் சூழலியல் சிக்கல்களை எடுத்துக்காட்டி, அவற்றின் கேடுகளை ஆவணப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் திருப்பூரில் தண்ணீர் தனியார் மயமாக்கப்பட்டிருப்பதன் பின்னணியில் உருவெடுத்துவரும் பேராபத்தையும் தொடக்க நிகழ்வில் பங்குபெற்ற பலரும் வலியுறுத்திப் பேசினார்கள்.

## திரையிடல்கள் மற்றும் நாடகம்

படவிழாவின் தொடக்கப்படமாக ‘ரேபிட் ப்ரூஃப் பென்ஸ்’ (Rabbit proof fence) என்ற திரைப்படம் திரையிடப்பட்டது. இது ஆஸ்திரேலியா அபோர்ஜின்ஸ் பிரச்சினைகளைப் பேசியது. தொடர்ந்து ‘ஜலால்ஸ் ஸ்டோரி’ என்ற பங்களாதேஷ் நாட்டின் திரைப்படம் திரையிடப்பட்டு, அதன் இயக்குநர் அபு சஹேத் ஈமானுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. பின்னர் காவிரி ஆற்றின் பயணம் குறித்த ‘Journey with the River Cauvery’, உலகமயமாதலுக்குப் பிறகான சென்னையைக் குறித்த ‘யாருக்காக சிங்காரச் சென்னை’ ஆகிய இரு ஆவணப்படங்கள் திரையிடப்பட்டன.

முதல்நாள் திரையிடல்களின் முடிவில் மறைந்த எழுத்தாளர் அசோகமித்திரனின் ‘தண்ணீர்’ என்ற நாவலை மையமாக வைத்து அதே பெயரில் இயக்குநர் அருண்மொழி இயக்கியிருந்த நவீன நாடகத்தை நடிகர் விஜய் சேதுபதி தொடங்கி வைத்து ‘சூழலியல் திரைப்படவிழாவின் அவசியம்’ குறித்துப் பேசினார்.



முதல்நாள் நிறைவில் அருட் தந்தை லாசர், விஜய் சேதுபதி, ஏ.பி. அருண் கண்ணன்

## இயக்குநர்களின் பங்கேற்பு

இரண்டாம் நாள் திரையிடலில் மூன்று தேசிய விருதுகள் உட்படத் தனது படைப்புகளுக்காகப் பல சர்வதேச விருதுகளைப் பெற்றிருக்கும் பிரபல மலையாள இயக்குநர் பிஜு தாமோதரின் ‘காடு பூக்குன்ன நேரம்’ பங்குபெற்றது. மாவோயிஸ்டுகளை மையமாக வைத்து எடுக்கப்பட்டிருக்கும் இப்படக்காட்சியின் முடிவில் இயக்குநர் பிஜு மாணவர்களுடன் கலந்துரையாடினார். அதேபோல் சர்வதேசப் படவிழாக்களில் தொடர் கவனம் பெற்றுவரும் இலங்கையைச் சேர்ந்த நிர்மலன் நடராஜாவின் ‘அன்லாக்’ குறும்படம் திரையிடப்பட்டு பார்வையாளர்களிடம் பெரும் வரவேற்பைப்பெற்றது.

“போர்களினால் ஏற்படும் அழிவென்பது நம் கற்பனைக்கு அப்பாற்பட்ட துயரம் மிக்கது. போர் இனி எங்கும் நடக்கக் கூடாது, போர்களுக்கான துயர சாட்சியாக வாழும் தமிழீழ மக்களின் சார்பாக இதை நான் கேட்டுக்கொள்கிறேன்” என்ற கனத்த உரையை நிகழ்த்தினார் நிர்மலன். அவரிடம் ஈழத்தின் இன்றைய நிலை குறித்துப் பல கேள்விகள் கேட்கப்பட்டன. அனைத்துக்கும் பதில் அளித்தார். அன்று மாலை நடந்த கலந்துரையாடல் நிகழ்வில் திரைக்கதாசிரியர் அஜயன் பாலா கலந்துகொண்டார்.

‘டேம்ட் ரெய்ன்(Dammed Rain) என்ற மராட்டியப் படத்துடன் தொடங்கிய மூன்றாம் நாள் திரைப்படவிழாவில் அந்தப் படத்தின் சதிஷ் மன்வர், இந்தப் படத்துக்காக தான் நேரடியாக மேற்கொண்ட கள அனுபவங்களையும் அவர் சந்தித்த விதர்பா பகுதி விவசாயிகளின் தொடரும் துயரங்களையும் பகிர்ந்துகொண்டார். தொடர்ந்து ‘த லொரக்ஸ்’ என்ற அனிமேஷன் படம், தேசிய விருது பெற்ற ‘லேடி ஆஃப் த லேக்’ (Lady of the Lake) என்ற மணிப்பூர் மாநிலப் படமும் பொலிவியா நாட்டின் தண்ணீர் பிரச்சினையை மையமாக வைத்து எடுக்கப்பட்ட ‘ஈவன் த ரெய்ன்(EVEN the Rain) படமும் திரையிடப்பட்டன.

## சிறப்புத் திரையிடல்

இறுதிநாளில் நடிகர் விஜய்சேதுபதி தயாரிப்பில், லெனின் பாரதி இயக்கத்தில் இளையராஜா இசையில் உருவாகியிருக்கும் ‘மேற்குத் தொடர்ச்சி மலை’ திரைப்படம், திரையரங்குகளுக்கு வருமுன்பே பிரிமியர் திரையிடலாக ‘லைவ்’ படவிழாவின் கடைசிநாளில் திரையிடப்பட்டது. பல சர்வதேசப் படவிழாக்களில் பங்குபெற்று பாராட்டப்பட்டுவரும் இந்தப் படத்தின் இயக்குநருடன் கலந்துரையாடல் நடைபெற்றது.



‘மேற்குத் தொடர்ச்சி மலை’

“ மூன்று ஆண்டுகள் மலை மக்களோடும், அவர்களின் வாழ்க்கையோடும் ஒன்றிப் பழகிய பின்புதான் படப்பிடிப்பைத் தொடங்கினோம். மேற்குத் தொடர்ச்சி மலையும் அங்குள்ள வாழ்வும் நமது பெருமிதம், நமது அரண். அதை நாம் இழந்துவிடக்கூடாது” என்று பேசினார் இயக்குநர் லெனின் பாரதி. நிறைவுவிழாவுக்கு பி.சி. ஸ்ரீராம், மிஷ்கின், எஸ்.பி. ஜனநாதன் உள்ளிட்ட திரை ஆளுமைகள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு பேசினார்கள்.

தனது குழுவுடன் இணைந்து திரைப்படவிழா ஒருங்கிணைப்புப் பணிகளைச் சிறப்பாகச் செய்துவந்த ‘லைவ்’ துறையின் கௌரி சங்கர், “இந்தச் சூழலியல் படவிழாவுக்கு அருண் கண்ணன் தலைமையிலான குழுவினர் புவியியல்ரீதியாக முக்கியத்துவம் கொடுத்து படங்கள் தேர்வு செய்திருந்தது சர்வதேசப் படவிழா என்ற அளவுகோலுக்குப் பலமாக அமைந்தது. அதேபோல் திரையிடப்பட்ட படங்களின் இயக்குநர்களில் பலர் நேரில் பங்குபெற்றது நம் நோக்கத்தை மேலும் அர்த்தமுள்ளதாக மாற்றியது. தமிழகம் முழுவதிலுமிருந்து ஊடக மாணவர்களும் திரை மற்றும் சூழலியல் ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்” என்கிறார்.

தி இந்து
தமிழால் இணைவோம்
புதன், மார்ச் 7, 2018

# லைவ் சர்வதேசப் படவிழா 2018: மண், தண்ணீர், காற்று மற்றும் திரைவிழா

சர்வதேச, தேச அளவிலான தலையாய பிரச்சினை பொருளியல் சார்ந்ததோ வளர்ச்சி சார்ந்ததோ அல்ல. உலகம் முழுமைக்குமான பொதுவான சிக்கல், சூழல் மற்றும் பருவநிலை சார்ந்த மாறுபாடுகளும் அதனால் உருவாகியுள்ள அசாதாரண நிலையுமே.







இதுவரை பூமியில் வாழும் அத்தனை உயிர்களும் எதிர்கொண்ட சிக்கல்களிலிருந்து இது முற்றிலும் வேறானது. உயிர்வாழ்வதற்கான சூழல் ஒட்டுமொத்தமாக அழிந்துகொண்டிருக்கிறது. தங்களைக் காத்துக்கொள்ள அல்லது எஞ்சியிருக்கும் சூழலைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டிய அவசியமான தருணம் இது.

அழிவின் பிரதான சாட்சியாய் தென்னாப்பிரிக்காவின் கேப்டவுன் நகரம் இன்று நம் முன் நிற்கிறது. அந்த நகரில் தண்ணீர் சுத்தமாக இல்லாமல் போகும் நிலை உருவாகியுள்ளதாக சமீபத்திய செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. இன்று அந்த நகருக்கு ஏற்பட்ட நிலை நாளை உலகம் முழுமைக்கும் நடக்கப்போகும் நாள் வெகு தொலைவில் இல்லை. சூழலுக்கான ஆபத்து என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் சார்ந்ததோ ஒரு நாட்டுக்கு மட்டும் உள்ள தனிப்பட்ட பிரச்சினையோ அல்ல. இது பூமியில் உயிரினங்கள் வாழ்வதற்கான சூழலை முற்றிலும் சிதைக்கிறது. இது ஒட்டுமொத்த பூமிக்குமான பிரச்சினை.

தண்ணீர், உணவு, காற்று, மண் உள்ளிட்ட அனைத்தும் வாழும் அத்தனை உயிர்களுக்கும் பொதுவானவை. ஆனால், மனித சமூகமானது இவை அனைத்தையும் தங்களின் சுயநலத்துக்காக மாசு படுத்தி, ஒரு மிகப் பெரிய அழிவுக்கு இட்டுச் செல்கிறது. இந்தத் தருணத்தில்தான், சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த குரல், முன் எப்போதும் இல்லாத வகையில் ஓங்கி ஒலிக்க வேண்டி இருக்கிறது. அரசியல், கலை, இலக்கியம் என அனைத்துத் தளங்களிலும் சுற்றுச்சூழல் பேசுபொருளாக்கப்பட வேண்டும்.

இதைக் கலை வடிவில் மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும் என்ற முயற்சியின் தொடக்கமாக, சென்னை லயோலா கல்லூரியின் LIVE (Loyola Institute of vocational Education) துறையும் பூவுலகின் நண்பர்கள் அமைப்பும் சர்வதேசச் சூழலியல் திரைப்பட விழாவை ஒருங்கிணைத்திருக்கின்றன.

இதுபற்றி லயோலா கல்லூரியின் முதல்வர் சேவியர் ஆரோக்கியசாமியிடம் கேட்டபோது, "சென்னை லயோலா கல்லூரி கடந்த 90 ஆண்டுகளாகக் கல்விப் பணியில் அனைத்துத் தரப்பு மக்களோடும் இணைந்திருப்பது அனைவரும் அறிந்த ஒன்று. காட்சி ஊடகத் துறையைத் (LIVE) தொடங்கி 20 ஆண்டுகளை நிறைவு செய்திருக்கிறது லயோலா. இதை அர்த்தபூர்வமாகக் கொண்டாட வேண்டும் என்ற நோக்கத்துடன் கல்லூரியில் இந்த ஆண்டு நடத்தும் எல்லா நிகழ்வுகளையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை முன்னிறுத்தியே நடத்திவருகிறோம்.

அதில் முக்கியமான ஒன்றாக, நான்கு நாட்கள் நடைபெறும் சர்வதேசச் சுற்றுச்சூழல் திரைப்பட விழாவைச் சொல்லலாம். தமிழகத்தில் சூழலியல் தளத்தில் முன்னின்று செயல்படும் 'பூவுலகின் நண்பர்கள்' அமைப்போடும் சுற்றுச்சூழலுக்கு என்று தனி இணைப்பிதழை வெளியிட்டுவரும் 'தி இந்து' தமிழ் நாளிதழுடனும் இணைந்து இந்தத் திரைப்பட விழாவை முன்னெடுப்பதை இன்னும் அர்த்தபூர்வமாக மாற்றியிருக்கிறோம்" என்கிறார்.


விஜய் சேதுபதி · பி.சி.ஸ்ரீராம் · ஸ்ரீகர் பிரசாத் · மிஷ்கின் · லிஜோ ஜோஸ் பெல்லிசேரி

## முக்கிய முகங்களும் படத் தேர்வும்

வரும் பிப்ரவரி 20 முதல் 23 வரை சென்னை லயோலா கல்லூரியின் காட்சி ஊடகத்துறை அரங்கில் நடைபெறும் இந்த சர்வதேசத் திரைப்பட விழாவை நடிகர் விஜய் சேதுபதி தொடங்கிவைக்கிறார். எழுத்தாளர் அசோகமித்திரனின் 'தண்ணீர்' நாடகத்தை இயக்குநர் அருண்மொழியின் உருவாக்கத்தில் ஸ்தானிஸ்லாவ்கி குழுவினர் நவீன நாடகமாக வெளிப்படுத்தும் நிகழ்வுடன் திரைப்பட விழா தொடங்குகிறது. இயக்குநர்கள் எஸ்.பி.ஜனநாதன், மிஷ்கின், நலன் குமரசாமி, லிஜோ ஜோஸ் பெல்லிசேரி, பி.சி. ஸ்ரீராம், ஸ்ரீகர் பிரசாத் போன்ற ஆளுமைகள் இதில் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்துகொள்ள இருக்கிறார்கள்.

பல்வேறு பகுதி மக்களின் சூழலியல் சிக்கல்கள் குறித்து பொதுவான ஒரு புரிதலைப் பார்வையாளர்கள் மத்தியில் உருவாக்க அருண் கண்ணன் தலைமையிலான பேராசிரியர் குழு படத் தேர்வில் கவனம் செலுத்தியிருக்கிறது. தேர்வுக்குழுவின் பரிந்துரை அடிப்படையில் வங்கதேசம், திபெத், அமெரிக்கா, ஈரான், பொலிவியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த சர்வதேச மொழித் திரைப்படங்கள் திரையிடப்பட உள்ளன.

"ஒரு உண்மையான படைப்பாளி மக்களின் மொழியில், மக்களுக்காகப் பேச வேண்டும். அன்றைய ஹிட்லரின் பாசிசத்தை சாப்ளின் தன் திரைமொழியில் துணிவுடன் வெளிப்படுத்தியதைப் போல, சாதியத்தின் கொடுமைகளைத் தற்கால மராத்தி பட இயக்குநர் நாகராஜ் மஞ்சுளே தனது திரைப்படங்களில் பதிவு செய்வதைப்போல இருக்க வேண்டும். சூழலியல் படங்களில் அதுபோன்ற படைப்புகளுக்கே முன்னுரிமை அளித்திருக்கிறோம்" என்கிறார்கள் படத் தேர்வுக் குழுவினர்.


ஜனநாதன் · சேவியர் ஆரோக்கியசாமி · சுந்தர்ராஜன் · நலன் குமாரசாமி

## கொஞ்சம் முன்னோட்டம்

படவிழாவில் திரையிடப்பட இருக்கும் படங்களில் 'த டாம்ட் ரெய்ன்' (The Damned rain) என்ற மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த படம் பார்வையாளர்களை உலுக்கி எடுக்கும் என்று நம்பலாம். நம் நாட்டு விவசாயிகளின் பிரச்சினைகளை மையமாக வைத்துப் பேசுகிறது இந்தப் படம். குறிப்பாக, மராட்டிய மாநிலம் விதர்பா பகுதியைச் சேர்ந்த ஒரு விவசாயி எத்தகைய பிரச்சினைகளை எதிர்கொள்கிறார், அதற்கான எதிர்வினைகளை எவ்வாறு அவர் வெளிப்படுத்துகிறார் என்பதை உண்மைக்கு மிக அருகில் நின்று பேசுகிறது.




பொலிவிய நாட்டின் தண்ணீர் சார்ந்த சிக்கலை மையமாக வைத்து எடுக்கப்பட்டது 'ஈவன் த ரெய்ன்' (Even the Rain). தண்ணீர் தனியார்மயமாக்கப்படுவதை எதிர்த்து அங்கு நடைபெறும் போராட்டத்தையும் அதனால் ஏற்படும் நிகழ்வுகளையும் அந்தப் பகுதியின் மக்களை வைத்தே காட்சிப்படுத்தியுள்ளனர். சர்வதேச அளவிலான சூழலியல் படங்களின் வரிசையில் இந்தப் படத்துக்கு முக்கிய இடமுண்டு. தண்ணீரைக் காசு கொடுத்து வாங்கத் தொடங்கியிருக்கும் நமக்கு இந்தப் படம் எப்படி அறிவுறுத்துகிறது என்பதைப் படத்தைக் காண்பதன் மூலமே உணர முடியும்.

ஈராக், துருக்கி நாடுகளின் எல்லையில் நடைபெறும் அமெரிக்கத் தாக்குதல்களிலிருந்து தப்பித்து, அகதிகள் முகாமில் தஞ்சமடையும் 13 வயது சிறுமி எதிர்நோக்குகிற சூழலை, பிரச்சினைகளை அதன் அரசியல் பின்னணியோடு நம்மை உறைய வைக்கும்விதமாகக் காட்சிப்படுத்தியிருக்கிறது 'டர்ட்டில்ஸ் கேன் ப்ளை' (Turtles can fly). பல சர்வதேச விருதுகளைப் பெற்ற இப்படம் வெகுஜனங்களின் கவனத்தையும் வெகுவாக ஈர்த்த ஒன்று.

இதுபோன்ற முக்கிய படங்களைத் திரையிடும் அதேநேரம் பார்வையாளன் தன்னை அமைதிப் படுத்திக்கொள்ளும்விதமாகச் சூழலியல் சார்ந்த சில கதைப்படங்களும் திரையிடப்பட இருக்கின்றன. அவற்றில் ஒன்று 'த இம்பாஸிபிள்' (The Impossible).

2004-ம் ஆண்டு இந்தியப் பெருங்கடலில், சுமத்ரா தீவில் சுனாமி ஏற்பட்டது. அந்த நேரத்தில் தாய்லாந்துக்குச் சுற்றுலா வந்த குடும்பம் சுனாமியில் மாட்டிக்கொண்டது. ஒட்டுமொத்த உலகத்தையே அதிரவைத்த அந்த இயற்கைப் பேரிடரில் சிக்கும் அந்தக் குடும்பம் எதிர்கொண்ட நிகழ்வுகளின் உண்மைக் கதையை வைத்து எடுக்கப்பட்ட இந்தப் படம் தரும் செய்திகள் வெளிப்படையானவை.


தினசரி திரையிடலுக்கு நடுவே முக்கியப் பங்கேற்பாளர்களுடன் படம் பற்றியும் சூழலியல் பற்றியும் உரையாடல் நடைபெற இருக்கிறது. மாணவர்களுக்கு 200 ரூபாயும் லயோலா கல்லூரியின் முன்னாள் மாணவர்களுக்கு 250 ரூபாயும் மற்ற சினிமா ஆர்வலர்கள் அனைவருக்கும் 300 ரூபாயுமாகப் பங்கேற்புக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 'லைவ்' சர்வதேசப் படவிழாவில் பங்கேற்க 9500149944, 9500092712 ஆகிய கைப்பேசி எண்களில் தொடர்புகொண்டு முன்பதிவு செய்துகொள்ளலாம்.

விகடன்
WEDNESDAY, MARCH 07, 2018

# சூழலியலைக் காப்பாற்ற நடத்தப்படும் சர்வதேசத் திரைப்பட விழா!

சக்தி தமிழ்ச்செல்வன்


Chennai: திரைப்படங்கள், இந்த நூற்றாண்டின் ஆகப்பெரிய கலைவடிவங்கள். இவை, உலகின் பல்வேறு நாடுகளில் தவிர்க்க முடியாத ஒன்றாக மாறியுள்ளன. பொழுதுபோக்குக்காக மட்டுமே அல்லாமல், சமூக மேம்பாட்டுக்கான கலை வடிவங்களாகவும் பல நாடுகளில் திரைப்படங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அரசின் திட்டங்களை விமர்சித்து பல திரைப்படங்கள் வெளிவந்துள்ளன. மக்களுக்கு அவர்கள் வாழும் தேசத்தின் உண்மை நிலை குறித்தான மறைக்கப்பட்ட பக்கங்களைத் திரைப்படங்கள் காட்சிப்படுத்தியுள்ளன.




இத்தகைய அம்சத்துடன் வெளிவரும் சிறந்த திரைப்படம், அந்த நாட்டில் மட்டுமின்றி உலகின் பல்வேறு நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது. இதற்காகப் பல்வேறு திரைப்பட விழாக்கள் உலகெங்கிலும் நடைபெறுகின்றன. அது, நல்லதோர் உரையாடலுக்கு வழிவகை செய்யும்.

சென்னை லயோலா கல்லூரியின் ஓர் அங்கமாக, லயோலா தொழிற்முறை தொழில்நுட்பக் கல்லூரி செயல்பட்டுவருகிறது. இந்தக் கல்லூரியில், ஒரு வருட டிப்ளோமா படிப்பாக சினிமா சார்ந்த தொழில்நுட்பப் படிப்புகள் உள்ளன; ஆண்டுதோறும் திரைப்பட விழாவும் நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு திரைப்பட விழாவானது, பிப்ரவரி 20–ம் தேதியிலிருந்து 23–ம் தேதி வரை நடைபெறுகிறது. இதில் முழுக்க முழுக்க சூழலியல் சார்ந்த திரைப்படங்களே திரையிடப்படுகின்றன. இந்தத் திரைப்பட விழாவை, இந்தக் கல்லூரியுடன் இணைந்து சூழலியல் சார்ந்து இயங்கிவரும் 'பூவுலகின் நண்பர்கள்' குழுவினர் ஒருங்கிணைத்துள்ளனர்.

சூழலியல் மற்றும் இயற்கை சார்ந்த விழிப்புஉணர்வு, தற்போது பல தரப்பினராலும் ஏற்படுத்தப்படுகிறது. அந்த அளவுக்கு உலகின் பல்வேறு நாடுகளும் தனது வளத்தை, குறிப்பாக நீர் ஆதாரத்தை இழந்துள்ளது. இந்திய கிரிக்கெட் அணி, தென்னாப்பிரிக்காவுடன் சமீபத்தில் விளையாடிய தொடரில் நீர் கட்டுப்பாடு விதித்து பலரையும் ஆச்சர்யப்படுத்தியது. இங்கு மட்டுமல்ல, நமது ஊர்களிலும் நீர்வளம் குறைந்து விவசாய நிலங்கள் அழிந்துவருவதை தினமும் நாம் கடந்து வந்திருப்போம். கடந்த பத்து ஆண்டுகளில் மிகத் தீவிரமான முறையில் சுற்றுச்சூழல் சார்ந்த விழிப்புஉணர்வும், இயற்கையை நோக்கி நாம் நகரவேண்டிய அவசியத்தையும் பல சூழலியலாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.




சூழலியல் சார்ந்து நடத்தப்படும் இந்த விழா குறித்து, அதன் ஒருங்கிணைப்பாளருடன் பேசினேன்...

"இந்தத் திரைப்பட விழா, பல வருடங்களாக நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு 20–வது வருடம் என்பதால், அதை இன்னும் சிறப்பாக நடத்தத் திட்டமிட்டுள்ளோம். இந்த வருடம் லயோலா கல்லூரியில் நடத்த, அனைத்து விழாக்களிலும் சூழலியல் சார்ந்த முன்னெடுப்புகளை எடுத்துள்ளோம். அதன் தொடர்ச்சியாக இந்த விழாவிலும் சூழலியல் சார்ந்த கதை அமைப்புடைய திரைப்படங்களைத் திரையிடுகிறோம். இந்தத் திரைப்பட விழாவில் ஏழு உலகத் திரைப்படங்களும், நான்கு இந்தியத் திரைப்படங்களும், ஆறு குறும்படங்களும் திரையிடப்படுகின்றன. இந்தத் திரைப்படங்கள் அனைத்தும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ இயற்கை மற்றும் சூழலியல் சார்ந்த திரைப்படங்களே!

இவை தவிர, நான்கு ஆவணப்படங்கள் திரையிடப்படுகின்றன. அவற்றில் நம்மாழ்வார் பற்றிய ஆவணப்படமும் ஒன்று. இதுமட்டுமின்றி, திருவண்ணாமலையில் வீடு கட்டிக்கொள்ளாமலேயே வாழ்ந்துவரும் காயத்ரி கோம்ஸ் என்கிற பெண்மணி பற்றிய ஆவணப்படமும் திரையிடப்படவுள்ளது. சோளக்காடுகளைப் பற்றிய ஓர் ஆவணப்படமும் திரையிடப்படுகிறது" என்றார்.

இந்த விழாவில் தமிழ் சினிமாவின் முக்கிய இயக்குநர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள், இலக்கியம் மற்றும் கலை கலாசாரத் துறை மாணவர்கள், பேராசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொள்கின்றனர்.

Wednesday,March.07,2018

NEWS TODAY

# World cinema in Loyola




Chennai: With just a day left for the four day international film festival organised by the Loyola Institute of Vocational Education (LIVE), a unit of Loyola College, *News Today* interacted with Director – LIVE, A P Arun Kannan about the preparations and plans for the event.

"We have been conducting this festival for the past couple of years and this year, it coincides with the 20th anniversary of LIVE. The theme for this year is nature and how people interact with it. For the first time we are allowing students from various other colleges to take part in the festival," he said.

He further said art is the best form to communicate effectively to a larger audience and cinema can be all the more effective to reach out to the diverse population.

Continuing the conversation, he emphasised the responsibility that students have when it comes to the entertainment industry.

"We want to transform students who pursue visual communication and film studies into responsible film makers in the future. They will learn to be more socially responsible by our collective efforts. Further, it is an opportunity for students to learn the different techniques of film-making. Focus will be on both technical aspect as well as art," he said.

When asked about the response thus far, he said, "The response is very good. The capacity for entrants is around 200, with 100 participants coming from in-house. However, the current number of registrations have exceeded that by a further 100 participants. We expect the number of participants to float, as students might have their own preferences when it comes to films."

The film festival will be held in collaboration with Poovulagin Nanbargal at Loyola viscom preview theatre in the college premises.

As part of their cultural activities, the film festival will feature movies from Bolivia, Tibet, Bangladesh, America, Iran, Australia apart form movies made in various regions across India. The festival will also feature an animation movie followed by four short films made by Loyola students and a short film from Sri Lanka. Screening of documentary movies is also slated to happen.

Various directors of Bangladeshi, Marathi, Malayalam, Tamil films and will be participating in the discussions at the festival. The festival is to be inaugurated by film editor Sreekar Prasad, film directors Lojo Jose Pellissery, Nallan Kumarasamy, Mysskin, S P Jananathan, actor Vijay Sethupathi and Cinematographer P C Sreeram will be participating in the valedictory program.

புதிய பார்வை
சமகாலத்தின் முகம்

# சர்வதேச சுற்றுச்சூழல் திரைப்பட விழா

## லயோலா மற்றும் பூவுலகின் நண்பர்கள் இணைந்து



லயோலா முதல்வர், Rev. Dr. M. ஆரோக்கியசாமி சேவியர், லிஜோ ஜோஸ் பெல்லிசேரி, நலன் குமாரசாமி, ஸ்ரீகர் பிரசாத், கவிதா முரளிதரன், Rev. Fr. A.M.ஜெயபதி பிரான்சிஸ்

சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த குரல் முன்னெப்போதும் இல்லாத வகையில் ஓங்கி ஒலிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். அரசியல், கலை, இலக்கியம் என அனைத்துத் தளங்களிலும் சுற்றுச்சூழல் பேசுபொருளாக்கப்பட வேண்டும். அதிலும், அவற்றைத் திரை வடிவில் ஆவணமாக்குதல் மக்களிடையே மிக எளிதாகவும், வேகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாக உள்ளது.

லயோலா கல்லூரி கடந்த 90 ஆண்டுகளாக செய்து வரும் கல்விப் பணி நாம் அனைவரும் அறிந்த ஒன்று. இந்தக் கல்லூரியின் காட்சி ஊடகத்துறை பல்வேறு சினிமா ஆளுமைகளை உருவாக்கியிருக்கிறது.

Loyola Institute of Vocational Education (LIVE), மற்றும் பூவுலகின் நண்பர்கள் அமைப்பும் இணைந்து மக்களுக்கும் இயற்கைக்குமான உறவையும் அதில் ஏற்படும் சிக்கல்களையும் அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்ட திரைப்படங்களைத் திரையிடும் நோக்கில், ஒரு சர்வதேச திரைப்பட விழாவை பிப்ரவரி 20ஆம் தேதி தொடங்கி பிப்ரவரி – 23 வரை தினமும் காலை 9.30 மணி தொடங்கி மாலை 6.30 மணி வரை நடத்தினார்கள். லயோலா கல்லூரி இந்த ஆண்டு நடத்தும் எல்லா நிகழ்வுகளையும் சூழல் பாதுகாப்பை முன்னிருத்தியே நடத்துகிறது. அதனால் இந்தத் திரைப்பட விழாவையும் அந்தக் கருத்தை ஒட்டியே வடிவமைத்திருக்கிறார்கள்.

மலையாள இயக்குனர் லிஜோ ஜோஸ், படத்தொகுப்பாளர் ஸ்ரீகர் பிரசாத் மற்றும் இயக்குனர் நலன் குமாரசாமி ஆகிய மூவரும் இந்த நிகழ்வைத் தொடக்கி வைத்து சிறப்புரையாற்றினார். மேலும் இயக்குனர் மிஷ்கின், இயக்குனர் SP ஜனாநாதன் மற்றும் ஒளிப்பதிவாளர் PC ஸ்ரீராம் ஆகியோர் நிறைவு விழாவில் பங்கேற்றனர்.

The Damned rain (Maharastra) மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த இந்தப் படம், நம் நாட்டு விவசாயிகளின் பிரச்னைகளை மையமாக வைத்து எடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மராட்டிய மாநிலம் விதர்பா பகுதியைச் சேர்ந்த ஒரு விவசாயி எத்தகைய பிரச்னைகளை எதிர்கொள்கிறார், அதற்கான எதிர்வினைகளை எவ்வாறு அவர் வெளிப்படுகிறார் என்பதை உண்மைக்கு மிக அருகில் நின்று பேசுகிறது.

பொலிவிய நாட்டின் தண்ணீர் சார்ந்த சிக்கலை மையமாக வைத்து Even the Rain என்னும் படம் எடுக்கப்பட்டது. அங்கு தண்ணீர் தனியார் மயமாக்கப்படுவதை எதிர்த்து அங்கு நடைபெறும் போராட்டத்தையும். அதனால்



ஏற்படும் நிகழ்வுகளையும் அந்தப் பகுதியின் மக்களை வைத்தே மிக அற்புதமாகக் காட்சிப்படுதியுள்ளனர். சர்வதேச அளவிலான சூழலியல் படங்களின் வரிசையில் இந்த படத்திற்கு முக்கிய இடமுண்டு.

Turtles can fly என்ற படம் ஈராக் துருக்கி எல்லையில் நடைபெறும் அமெரிக்க தாக்குதல்களில் இருந்து தப்பித்து அகதிகள் முகாமில் தஞ்சமடையும் 13 வயது சிறுமி எதிர்நோக்குகிற சூழலை, பிரச்னைகளை அதன் அரசியல் பின்னணியோடு எடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் படம், பல சர்வதேச விருதுகளை பெற்று வெகு மக்களின் கவனத்தை ஈர்த்தது.

The Impossible என்ற படம் சுனாமி அனுபவங்களை ஒட்டியது. 2004 ஆம் ஆண்டு இந்தியப் பெருங்கடலில் சுமாத்ரா தீவில் சுனாமி ஏற்பட்டது. அந்த நேரத்தில் தாய்லாந்துக்கு சுற்றுலா வந்த குடும்பம் சுனாமியில் மாட்டிக்கொண்டது. ஒட்டுமொத்த உலகத்தையே அதிர வைத்த அந்த இயற்கைப் பேரிடரில் சிக்கும் அந்தக் குடும்பம் எதிர்கொண்ட நிகழ்வுகளின் உண்மைக் கதையை வைத்து எடுக்கப்பட்டதே இந்தப் படம்.

### முதல் நாள் நிகழ்வு

'அங்கமாலி டைரீஸ்' படத்தின் இயக்குனர் திரு. லிஜோ ஜோஸ் பெல்லிசெரி, 'சூது கவ்வும்' இயக்குனர் திரு. நலன் குமாரசாமி மற்றும் திரைப்பட தொகுப்பாளர் திரு. ஸ்ரீகர் பிரசாத் ஆகியோர் இணைந்து இந்த நிகழ்வைத் தொடக்கி வைத்தனர். நிகழ்வில் லயோலா கல்லூரியின் Rev. Fr. Rector A. M. பிரான்சிஸ் ஜெயபதி, Rev.Fr. Principal முனைவர். வி. சேவியர் ஆரோக்கியசாமி, LIVE துறையின் இயக்குனர் திரு. A. P. அருண் கண்ணன் மற்றும் பூவுலகின் நண்பர்களைச் சேர்ந்த மூத்த பத்திரிகையாளர் தோழர் கவிதா முரளிதரன் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர். பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் திரு. ராஜாராம் நன்றி கூறினார்.

மாலையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழின் முன்னணி நடிகர் திரு. விஜய் சேதுபதி கலந்துகொண்டார். திரு. அருண்மொழி இயக்கிய 'தண்ணீர்' நாடகத்தை தொடங்கிவைத்து அவர் உரை நிகழ்த்தினர்.

Rabbit Proof Fence, Jalal's Story மற்றும் குறும்படங்கள், ஆவணப்படங்கள் திரையிடப்பட்டன. மாலையில் நடைபெற்ற கலந்துரையாடலில் Jalal's Story படத்தின் இயக்குனர் திரு. அபு சஹேத் இமான் கலந்துகொண்டு தன் திரை அனுபவங்களைப் பார்வையாளர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

### இரண்டாம் நாள் நிகழ்வு

இந்தியாவின் மிக முக்கிய இயக்குனர்களுள் ஒருவரும், பல சர்வதேச, மற்றும் தேசிய விருதுகளை பெற்றுள்ள இயக்குனர் பிஜு தாமோதர் அவர்களின் காடு பூக்குன்னா நேரம் திரையிடலும் கலந்துரையாடலும் நடைபெற்றன. அதைத் தொடர்ந்து திபெத்தை களமாக வைத்து எடுக்கப்பட்ட Mountain Patrol திரையிடப்பட்டது.

பல சர்வதேச திரைப்பட விழாவில் விருதுகளை வென்ற, இலங்கையைச் சேர்ந்த நிர்மலன் நடராஜா இயக்கத்தில் UN lock



பிஜு



அஜயன் பாலா



நிர்மலன் நடராஜா



டாக்டர். எஸ். லாசர், அருண்மொழி, விஜய்சேதுபதி, A.P. அருண் கண்ணன்

குறும்படம் திரையிடப்பட்டு, அது குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது. படம் குறித்த கேள்விகளுக்கு நிர்மலன் அவர்கள் பதிலளிக்கையில், போர்களினால் ஏற்படும் அழிவென்பது நம் கற்பனைக்கு அப்பாற்பட்ட துயரமிக்கது. போர்களுக்கான துயர சாட்சியாக வாழும் தமிழீழ மக்களின் சார்பாக இதை நான் கேட்டுக்கொள்கிறேன் என கனத்த குரலோடு உரையை நிறைவு செய்தார்..

மதிய உணவுக்கு பிறகு, The Impossible என்கிற ஹாலிவுட் திரைப்படம் திரையிடப்பட்டது. சுனாமியில் தாய்லாந்துக்கு சுற்றுலா சென்ற குடும்பம் சந்தித்த பிரச்சினைகளை மையமாக வைத்து எடுக்கப்பட்டது இந்தப் படம்.

மாலையில், இயக்குனர், எழுத்தாளர் அஜயன் பாலா அவர்கள் பார்வையாளர்கள், திரைத்துறை மாணவர்கள் மத்தியில் தன் திரை அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். உண்மை சம்பவங்களை அடிப்படையாக வைத்து எடுக்கப்படும் படங்கள் நம் நாட்டில் பெரிதாக ஏன் எடுக்கப்படுவதில்லை என்கிற கேள்விக்கு, பதிலளித்த அவர், "இந்திய, தமிழ் சினிமா படைப்பாளிகள் மத்தியில் வாசிப்பு பழக்கம் குறைந்து வருவதும், அதனால் அவர்களால் பிரச்னைகள் சார்ந்தோ, உண்மை சம்பவங்களை அடிப்படையாக வைத்தோ படங்கள் எடுக்க முடிவதில்லை." என்று எடுத்துரைத்தார்.

### மூன்றாம் நாள் நிகழ்வு

மூன்றாம் நாள் நிகழ்வில் காலையில் மராட்டிய இயக்குனர் திரு. சதிஷ் மன்வர் அவர்கள் இயக்கிய Dammed Rain திரைப்படம் திரையிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து அந்தப் படத்தின் இயக்குனருடன் கலந்துரையாடல் நடைபெற்றது. கலந்துரையாடலை திரு. மதியழகன் சுப்பையா ஒருங்கிணைத்தார்.

பின்பு The Lorax என்கிற அனிமேஷன் படமும், அதனைத் தொடர்ந்து தேசிய விருது பெற்ற மணிப்புரி மாநிலத்தின் Lady of the Lake திரைப்படமும், அதனைத் தொடர்ந்து பொலிவியா நாட்டின் தண்ணீர் பிரச்னையை மையமாக வைத்து எடுக்கப்பட்ட EVEN the Rain திரைப்படமும் திரையிடப்பட்டது. இந்த இரண்டு திரையிடலிலும் பத்திரிகையாளர்கள் திரு. விஜய் ஆனந்த் மற்றும் திரு. ஜெயந்தன் ஆகியோர் திரைப்படம் குறித்து கலந்துரையாடினர்

'மேற்குத்தொடர்ச்சி மலை' திரைப்படமும் திரையிடப்பட்டு, அந்த படத்தின் இயக்குனர் மற்றும் குழுவினருடன் கலந்துரையாடல் நடைபெற்றது.பின்பு நிகழ்வின் கடைசி படமாக Turtles can fly என்கிற திரைப்படம் திரையிடப்பட்டது. பின் இறுதி நாள் நிகழ்வில், லயோலா LIVE துறையின் ஒருங்கிணைப்பாளர் ஷோபனா கெசியா அவர்கள் வரவேற்றார், அவரைத் தொடர்ந்து ஒட்டு மொத்த திரைப்படவிழாவினை தொகுத்து, அதன் நோக்கம் குறித்து பேசினார் பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் சுந்தர்ராஜன். சிறப்பு விருந்தினர்களாக ஒளிப்பதிவாளர் பி.சி. ஸ்ரீராம், திரைப்பட இயக்குனர்கள் மிஷ்கின், ஜனநாதன், சமூக செயற்பாட்டாளர் பிரேமா ரேவதி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். மணி ஸ்ரீதர் அவர்கள் நன்றி கூறினார்.